[12th February 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் தொகையின் அளவு நாம் எடுத்துக்கொண்ட திட்டங்களைப் பொறுத்திருக்கிறது. அவர்களுடைய திட்டப் பிரகாரம் நமது திட்டத்திற்கு அவர்களிடமிருந்து வர வேண்டிய தொகை ரூ. 2,000. அதை அவர்கள் கொடுத்திருக்கிருர்கள். ஹிந்தியை இன்னும் அதிகமாகப் பரப்புவதற்காக அவர்களிடமிருந்து நாம் இன்னும் நிதி உதவி பெறுவதைப் பொறுத்தவரையில், “ஹிந்தியை எந்த முறையில் பரப்புவது என்பதைப்பற்றி இந்த சபையும் விவாதித்திருக்கிறது ; சர்க்காரும் அது சம்பந்தமாகத் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறது” என்ற காரணத்தால் அந்தப் பிரச்னை இந்த சந்தர்ப்பத்தில் எழவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : இந்தப் பணம் எப்படி விநியோகிக்கப்பட்டு செலவிடப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஹிந்தியைக் கற்றுக்கொள்வதற்கு ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கவேண்டுமா அல்லது ட்யூஷன் மூலம் ஹிந்தி கற்றுக்கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையின் முயற்சிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. அப்படி அளிக்கப்படும் நிதி உதவியில் பாதித் தொகை மத்திய சர்க்காரால் கொடுக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN : சென்னை அரசாங்கத்தர், இந்த வட்டாரத்தில் ஹிந்தியைப் பரப்புவதில் காட்டும் அளவு அக்கறையை, இந்த மாநில அரசாங்க உத்தியோகஸ்தர்களில் தமிழ் தெரியாதவர்கள் தமிழ் கற்பதை ஊக்குவிப்பதற்கும் காட்டுகிருர்களா ? அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கிருர்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழைப் பரப்புவதில் கனம் அங்கத்தினரைவிட எனக்கு அதிக ஊக்கம் இருக்கிறது என்பதை அவரே அறிவார் என்று நம்புகிறேன். தமிழைப் பரப்புவதற்கு வேண்டியவற்றையெல்லாம் நாங்கள் செய்துவருகிரும்.

Deputation of State Police Force to Assam.

* 65 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have sent any Police Force to Assam to fight the Naga rebels; and

(*b*) if so, whether the expenditure is boren by the State Government or Union Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Malabar Special Police has been deputed to the Naga Hills area of Assam to perform guard and other duties.

(*b*) The expenditure is initially borne by this Government. The expenditure incurred up to 30th November 1957 will be recovered from the Assam Government. As the administration of the Naga Hills district has been taken over by the Government of India with effect from 1st December 1957, the expenditure incurred from that date will be recovered from the Government of India.

* 66 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any Police force was deputed for service in the Naga Hills region;